சாதனை படைத்து வெற்றி கண்ட உலகத் தமிழர்களின் மாதர் குல தெய்வமே, ஜகத்தில் வாழும் ஒட்டுமொத்த தமிழர்களும் போற்றும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவே, எனது சேந்தமங்கலம் தொகுதியில், சேந்தமங்கலத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற சோமேஸ்வரர் கோயில் உள்ளது. அந்தக் கோயிலில்தான் அருகிலுள்ள சுற்று வட்டார மக்கள் வந்து திருமணம் செய்துகொள்கிறார்கள். அந்தக் கோயில் மிகவும் பாழடைந்த நிலையில் உள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தக் கோயிலைப் புனரமைத்து, கும்பாபிஷேகம் செய்து கொடுக்க வேண்டுமென எனது தொகுதி மக்களின் சார்பாக அன்போடு வேண்டுகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பிரசித்தி பெற்ற அந்தக் கோயில் பாழடைந்த நிலையில் உள்ளது என்று குறிப்பிட்டார்கள். அந்தத் திருக்கோயில் ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் அனுமதி பெற்று உடனடியாகப் பணிகள் தொடங்கப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 247, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன், மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

247—

விரைவுப் பேருந்து

***60609—திரு. ஆ. நாராயணன்:**

மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, இட்டமொழியிலிருந்து சென்னைக்கு விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 செப்டம்பர் 14]

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டமே, இல்லை, இல்லை, அகில உலகமே போற்றும் வகையில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்களைப் போட்டு, 2 இலட்சத்து 42 ஆயிரத்து 160 கோடி ரூபாய் முதலீட்டை ஈர்த்து, 4 இலட்சத்து 70 ஆயிரத்து 65 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பை உருவாக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) இளைஞர்களின் எதிர்காலமாக விளங்குகின்ற, இனிமேல் தமிழகம் மாண்புமிகு அம்மா அவர்களின் பக்கம்தான் என்கிற சரித்திர சாதனையை உருவாக்கிய (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) இட்டமொழியிலிருந்து சென்னைக்குப் பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்பட்சத்தில், மாண்புமிகு அம்மா அவர்களினுடைய அரசு இதனைப் பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.*

திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின்மூலம் தமிழகத்தின் வளர்ச்சிக்காக முதல்கட்டமாக 2 இலட்சத்து 42 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் 4 இலட்சத்து 70 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்க ஏற்பாடு செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதியின் கடைசி பகுதியான இட்டமொழியிலிருந்து, விஜயஅக்கம்பாடு, விஜயநாராயணம், காரியாண்டி,

முனஞ்சிப்பட்டி, மூலக்கரைப்பட்டி, ரெட்டியார்பட்டி மற்றும் மதுரை, திருச்சி வழியாகச் சென்னைக்கு அரசு விரைவுப் பேருந்து இயக்கப்படும்பட்சத்தில், நாங்குநேரி தொகுதிக்குட்பட்ட 20 ஊராட்சிகளைச் சேர்ந்த 50,000 மக்கள் பயன்பெறுவார்கள். தற்போது, இவர்கள் சென்னை செல்வதற்கு திருநெல்வேலி, திசையன்விளை மற்றும் வள்ளியூர் 10 கி.மீ. முதல் 20 கி.மீ. வரை மாற்றுப் பேருந்தில் பயணித்து, அங்கிருந்து சென்னை செல்கிறார்கள். இவ்வழித்தடத்தில் அரசு விரைவுப் பேருந்து மட்டுமல்லாமல், தனியார் பேருந்துகளும் இதுவரையிலும் இயக்கப்படவில்லை. நாங்குநேரி தொகுதிக்குட்பட்ட மக்கள் சுற்றுவட்டாரப் பகுதிகளில் வணிகம் செய்து வருகிறார்கள். அரசு விரைவுப் பேருந்து சென்னைக்கு இயக்கப்படும்பட்சத்தில் நாங்குநேரி தொகுதி மக்கள் பயன்பெறுவார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு இட்டமொழியிலிருந்து சென்னைக்கு அரசு விரைவுப் பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இட்டமொழியிலிருந்து திசையன்விளை 9 கி.மீ. தூரம்தான் உள்ளது. அங்கிருந்து தினந்தோறும் சென்னைக்குச் செல்ல பஸ் இருக்கின்றது. அங்கு கணக்கெடுத்துப் பார்த்ததில் இட்டமொழியிலிருந்து சென்னைக்குச் செல்லும் பயணிகளாக 4 அல்லது 5 பேர்தான் வருகிறார்கள். ஆகவே, எதிர்காலத்தில் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்பட்சத்தில், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலித்து முடிவெடுக்கும். இல்லையென்றாலும்கூட, இதனை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, திசையன்விளை செல்கின்ற பேருந்தினை இட்டமொழி வழியாகச் செல்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதியைப் பெற்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.*

2015 செப்டம்பர் 14]

திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, கண்டிப்பாக அவ்வசதி ஏற்படுத்தித் தரப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் எங்களுடைய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாகவும், எங்கள் தலைவர் அவர்கள் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 248, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.வ. மார்க்கண்டேயன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

248—

ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம்

*5245 **திரு. கு.வ. மார்க்கண்டேயன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதி, விளாத்திகுளத்தில் ஒருங்கிணைந்த மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளத்தில் ஒருங்கிணைந்த மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால், 1 கோடியே 68 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டுமானப் பணிகள் பொதுப் பணித் துறையால் முடிக்கப்பட்டுள்ளன